தமிழ் நாடு சட்டப் பேரவை

வெள்ளிக் கிழமை, 1974 மார்ச் 8.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. இரங்கல் தீர்மானம்

திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1937-ம் ஆண்டு முதல் 1939-ம் ஆண்டு வரை, அன்றைய ஒருங்கிணைந்த சட்டப்பேரவையில், தென்னிந்திய வணிகச் சங்கத்தின் சார்பாகத் தேர்ந்தெடுக்கப் பட்டு உறுப்பினராக இருந்தவரும், முன்னாள் மத்திய அமைச்சராக இருந்தவருமான திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் நேற்று, 7—3—1974 அன்று மறைந்து விட்ட துயரமான செய்தியை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள் கிறேன். அன்னாரின் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தைப் பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிவார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, "தமிழ் நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப் பினராகவும், இந்திய அரசின் முன்னாள் அமைச்சராகவும் பணி புரிந்த திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் இயற்கை எய்தியமை குறித்து இம் மன்றம் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. அன்னாரது குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலையும், பரிவுணர்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறது"

என்ற இரங்கல் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 மார்ச் 8

திரு. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் தமிழகத்தினுடைய முதிர்ந்த அரசியல் தலைவர்களிலே ஒருவராகத் திகழ்ந்தார்கள். அவர்கள் பொருளாதார வல்லுநராகவும், வர்த்தகத் துறையிலே ஈடுபட்டவராகவும் இருந்தது மட்டுமல்லாமல், சிறந்த நிர்வாகத் திறமை வாய்ந்தவராகவும் திகழ்ந்து வந்தார்கள்.

1937-ம் ஆண்டு முதல் 1939-ம் ஆண்டுவரை தென்னிந்திய வர்த்தக சங்கத்தின் பிரதிநிதியாக இந்தப் பேரவையில் அவர்கள் வீற்றிருந்து பணியாற்றினார்கள். 1942-ம் ஆண்டு மத்திய சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பிறகு அரசியல் நிர்ணய சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதிலும் பணியாற்றினார்கள். அதற்குப் பிறகு, அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கும் குழுவிலே அவர்கள் அங்கம் பெற்று, தங்களுடைய பணியினை அந்தக் குழுவிலே இருந்தும் ஆற்றி வந்தார்கள்.

1952-ம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டு மத்திய அமைச்சரவையில் வர்த்தக-சுரங்க-உருக்கு தொழில் அமைச்சராக விளங்கி, பிறகு நிதி அமைச்சராகவும் திகழ்ந்தார்கள். 1958-ம் ஆண்டு பதவியிலிருந்து விலகி, பிறகு 1962-ம் ஆண்டு முதல் 1965-ம் ஆண்டு வரையில் நிதி அமைச்ச ராகவும் மீண்டும் திகழ்ந்தார்கள்.

அப்படி மத்திய அமைச்சரவையிலும் மாநில சட்டப் பேரவையிலும் உறுப்பினராகத் திகழ்ந்து பணியாற்றியவர் இப்பொழுது மறைந்துவிட்டார். அவர்கள் தம்முடைய 74-ம் வயதில் இயற்கை எய்தியது நமக்கெல்லாம் பேரிழப்பாகும். அவர்கள் சிறந்த பொருளாதார வல்லுநராக இருந்து, அவ்வப் போது சிறந்த பல கருத்துக்களைக் கூறி வந்திருக்கிறார்கள். அவர் பல தடவை இந்தியாவின் சார்பாகப் பல்வேறு தூதுக் குழுக்களில் இடம்பெற்று உலகச் சுற்றுப் பயணம் சென்று வந்திருக்கிறார்.

இப்படிப்பட்டவரை—தமிழகத்தின் முதுபெருந்தலைவராக இருந்த ஒருவரை—இழந்திருப்பது தமிழகத்திற்கு ஒரு பெரும் இழப்பு என்றே சொல்ல வேண்டும். அந்த அளவில் அவர்களுடைய மறைவு குறித்து இந்தப் பேரவை தனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்வது மட்டுமல்லாமல், அவரைப் பிரிந்து வருந்தும் அவருடைய குடும்பத்தினர், நண்பர்கள், மற்றவர்கள் எல்லோருக்கும் ஆழ்ந்த இரங்கலை இந்தத் தீர்மானத்தின் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Mr. Speaker, Sir, I would like to associate myself with the sentiments expressed by the Hon. the Leader of the House about Thiru T.T. Krishnamachari. He had left an indelible mark on the Indian political firmament and he was a statesman and politician who had led the country to very good results.

Sir, Thiru T.T.K. began his life in the industrial field and originally he was the sole representative of the Lever Brothers and before pre-Independence he had his own convictions and as a result of his political convictions, he began to support the Independence Movement. He had been elected to this House in 1936 or 1937 and as a legislator he had been doing very well.

I can say without fear of contradiction that he was one of the topmost politicians who had shaped the economy of the present day India as the Finance Minister and he had arranged everything at the Centre. He was the best friend of our late revered Prime Minister Nehru.

As a Finance Minister he had his own views about things and he was a great architect for shaping the democratic Socialism at the Avadi Congress. Even though he was an individualist by conviction he had to change his views and the idea of democratic socialism had been developed in the Avadi Congress in which he also took a leading part. He was a great economist and a very good administrator. He saw all political vicissitudes and while he was Finance Minister, there were occasions when certain allegations were hurled against him, especially when the Mundhra affair was enquired into by a Commission and finally he had been exonerated. But after that he again became Finance Minister and he had put the Finance Ministry in good shape.

We had been just watching the movement of T.T.K. when he practically retired from active politics.

He had his own firm convictions and fearless expositions of his views. He used to ventilate his feelings and views through various press conferences. The last press conference which he held, even though it evoked a certain controversy, was full of meaning.

I think he had been a constant friend, philosopher and guide so far as the Indian politicians are concerned. He had been a firm friend and good counsellor of our Party Leader, Thiru Kamaraj and it is a personal loss to him, and that is what he has stated to the press.

TRUTH ALONE TRIUMPHS

I think this House will agree with me when I say that persons of the eminence of T.T.K. are lacking and there are persons who had left an indelible mark on the Indian firmament and I think his example should be emulated by politicians. He had always been forthright in his views and I am sure that in his loss the country has lost an able statesman and politician. Sir, I would once again, through this House, express my deep sense of sorrow to the bereaved members of his family and may his soul rest in peace.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சரவர்களால் முன்மொழியப்பட்ட இந்த இரங்கல் தீர்மானத்தில் சில கருத்துக்களை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய காலஞ்சென்ற திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் ஏறத்தாழ 45 ஆண்டுகளாக நம்முடைய நாட்டில் ஒரு சிறந்த அரசியல்வாதியாக பல்வேறு துறைகளில் சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார்கள் என்பது நாடறிந்த ஒரு உண்மையாகும். அவர் அரசியல் துறைக்கு வருவதற்கு முன்பாகவே, தன்னுடைய திறமைகளையெல்லாம் வேறு துறையிலே, குறிப்பாக பொருளாதாரத் (இக்கனமிக்) துறையிலே நல்ல வகையில் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். வெளிநாட்டினரும் புகழத்தக்க பெருமையோடு நல்ல இன்டஸ்ட்ரியலிஸ்டாகவும் விளங்கியிருக்கிறார்கள் பொருளாதார நிபுணர் என்று வெளிநாட்டவராலும் பாராட்டப் படத்தக்க முறையில் செயலாற்றி வந்தார்கள்.

அப்படிப்பட்ட ஒரு இன்டஸ்ட்ரியலிஸ்டை ஒரு பெரிய அரசியல் வாதியை—நாங்கள் இழந்து தவிக்கின்றோம். சில நேரங்களில் அவருக்கும் மற்றவர்களுக்கும் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால், ஒரு நல்ல குணம் என்னவென்றால், நம்முடைய டி.டி.கே. அவர்கள், கருத்து வேறுபாடு இருந்தாலும். அந்தக் கருத்து வேறுபாட்டை எப்போதும் மதித்தவர்.

அவர் ஒரு உண்மையான ஜனநாயகவாதி, அவர் ஒரு சிறந்த பார்லிமெண்டேரியனாகவும் திகழ்ந்தார். வெளிநாட்டவர் ஆட்சியிலிருந்தபோதே அவர் பார்லிமெண்டேரியனாகத் திகழ்ந்தார். அவர் அப்பொழுது எதிர்க்கட்சியில் இருந்தார். அதற்குப்பிறகு, காங்கிரஸிலே பணியாற்றினார். அந்த நேரத்தில் எல்லாம்,

சந்தியமூர்த்திக்கு அடுத்தபடியாகக் கருதத்தக்க அளவிற்கு பார்லிமென்டேரியனாக பாராளுமன்றத்தில் நல்ல வகையில் பணியாற்றிக்கொண்டிருந்தார். அதற்குப்பிறகு, நம்முடைய நாட்டில் பொருளாதாரத் துறையில் பல்வேறு மாறுதல்களை யெல்லாம் கொண்டுவந்தார்கள்.

மத்திய அரசாங்கத்தின் நிதி அமைச்சராக இருந்த நேரத்தில் அவர் பல முற்போக்குத் திட்டங்களையெல்லாம் கொண்டு வந்தார். இன்றையதினம் கூட சொல்கிறார்கள்--சில முற்போக்குத் திட்டங்களுக்கெல்லாம் மூல காரணமாக அவர்தான் இருந்தார், அவர்தான் முதலில் கோடிட்டுக் காட்டினார் என்று இப்பொழுதும் பல பேர் நம் நாட்டில் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில் நல்ல "பிரோக்கிரஸிவ் ஐடியாஸ்" என்று சொல்லக் கூடிய அளவுக்கு எண்ணங்களை வைத்துக்கொண்டிருந்தவர்கள். அவர்களை நாம் இழந்துவிட்டு இருக்கிறோம்.

அதே நேரத்தில் அவர்களுக்கு மற்ற எல்லாக் கட்சித் தலைவர் களுடனும் தொடர்பு இருந்தது. மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னது போல் மதிப்பிற்குரிய காமராசராக இருந்தாலும் சரி, ராஜாஜியாக இருந்தாலும் சரி, வேறு எந்தக் கட்சித் தலைவராக இருந்தாலும் சரி, அவர்களை அழைத்துப் பேசக்கூடிய பண்பாடு பெற்று இருந்தார்கள்.

மூதறிஞர் ராஜாஜி அவர்களுக்கும், டி. டி. கே. அவர்களுக்கும் இடையே அரசியலில் கருத்து வேறுபாடு இருந்தபோதிலும், ராஜாஜி அவர்களுக்கு டி. டி. கே. அவர்களை வாரத்திற்கு ஒரு முறையாவது பார்க்காமல் இருக்க முடியாது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். ராஜாஜி அவர்களை டி. டி. கே எப்போதும் கடுமையாக விமர்சனம் செய்து கொண்டு இருப்பார். ஒரு தடவை டி.டி.கே. அவர்கள் பாராட்டியவுடனே, அவரைப் போய் ராஜாஜி பார்த்து விட்டு வந்தார்கள். அந்த அளவுக்கு ஒருவருக் கொருவர் நட்பு வைத்துக் கொண்டிருந்தார்கள். அதற்குக் காரணம், கருத்து மாறுபாடு வேறு, நட்பு வேறு என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

திரு. டி.டி.கே. அவர்கள் கடைசிக் காலம் வரையில் தன்னுடைய 'மைன்டை அலெர்ட்டாக' வைத்துக்கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்டவர்களை நாம் இழந்துவிட்டுத் தவிக்கிறோம். ஆகவே, அவருடைய இழப்பு ஈடு செய்யமுடியாத இழப்பு, சரிகட்ட முடியாத இழப்பு என்று சொன்னால் மிகையாகாது.

"He has left a serious void in the political arena"

என்று சொல்லக்கூடிய அளவுக்கு அவர்களுடைய நிலைமை யிருக்கிறது, என்று கூறி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அவர்களுடைய குடும்பத்தாருக்கும் அவர்களுடைய வேறு நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் சொல்லிக் கொண்டு, வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: தலைவரவர்களே, மறைந்த மாபெரும் தேச பக்தர் திரு. டி.டி.கே. அவர்கள் மறைவு குறித்து நமது அவையின் முன்னவர் அவர்கள் கொண்டு வந்த இரங்கல் தீர்மானத்தோடு பார்வார்ட் பிளாக் கட்சியின் அனுதாபத்தையும் நான் சேர்த்து இணைத்துக் கொள்கிறேன்.

நம்முடைய நாடு இருக்கும் இன்றைய பொருளாதார சிக்கலில் ஒரு பெரிய பொருளாதார மேதையை நாம் இழந்து இருக்கிறோம். அவருடைய மறைவு இந்த நேரத்தில் பெரிய இழப்பாகும். எனக்கு முன்பு பேசியவர்களும், அவை முன்னவர் அவர்களும் திரு. டி.டி.கே. அவர்களின் சேவையையும், அவர்கள் நம்முடைய ஜனநாயகம் வளர்வதற்காகச் செய்து வந்த பணிகளையும், தேசியத் திற்காகப் பாடுபட்ட செயல்களையும் விவரித்துச் சொன்னார்கள்.

அவர்களுடைய நல்ல சிறந்த எண்ணங்களையும், கருத்துக் களையும், இந்த நாடே அறியும். அத்தகைய பெரியவர் இந்த நேரத்தில் மறைந்தது பெரிய இழப்பாகும் என்று கூறி, எங்களுடைய கட்சியின் சார்பில் அனுதாபத்தையும், இரங்கலையும் கூறி முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எம். சுரேந்திரன்: கனம் சபாநாயகர் அவர்களே, அவை முன்னவர் சபை முன் வைத்திருக்கிற இரங்கல் தீர்மானத்துடன், காங்கிரஸ் கட்சியின் ஆழ்ந்த அனுதாபத்தையும் சேர்த்துக் கொள்ள விரும்புகிறேன்.

1974 மார்ச் 8] [திரு. எம். சுரேந்திரன்]

இன்றைக்கு நாட்டிலே இருக்கின்ற நிலைமையிலே, அரசியல், சமுதாயம், பொருளாதாரம் போன்ற துறைகளிலே தேர்ந்த, அறிந்த, ஆற்றல் உள்ள தலைவர்கள் மிகத் தேவையான காலகட்டமாகும். அதிலும் குறிப்பாக, தமிழ் நாட்டை எடுத்துக்கொண்டால், உணர்ச்சிகளை முன் நிறுத்திக் காரியங்களைச் செய்யும் சூழ்நிலை வளர்ந்து, அறிவு பின்னுக்குப் போய்க் கொண்டிருக்கிற காலகட்டத்தில் இருந்து கொண்டிருக்கிறோம். இம்மாதிரி நேரங்களில்தான் உணர்ச்சிகளுக்கு வசப்படாமல், அறிவைக் கொண்டு ஆராய்ந்து, அறிவின் வேகத்தால் உணர்ச்சிகளை வளர்க்கும் முறைகளை, காரியங்களைச் செய்யும் பல தலைவர்கள் தேவைப்படும் காலகட்டமாக இருக்கிறது இப்போது.

இப்படி இருக்கும் நேரத்தில் டி. டி. கே. போன்ற ஒரு தலைவர் மறைந்து விட்டார் என்ற செய்தி எல்லோருக்கும் மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. அவர்களுடைய வயதைப் பார்த்தால், அவர் இறந்ததற்காக யாரும் வருத்தப்பட வேண்டியது இல்லை. ஆனால் அவருடைய கடந்த கால அறிவும், ஆற்றலும், அனுபவமும் இந்த நாட்டிற்கு, குறிப்பாகத் தமிழ் நாட்டிற்கு, எவ்வளவு தேவைப்பட்டிருக்கிறது என்பதை மதிப்பிட்டுப் பார்க்கிறபோது, இப்போது இருக்கிற காலக்கட்டத்தில் இவரைப் போன்ற தலைவர் நம்மிடம் இன்று இல்லையே என்று எண்ணிப் பார்க்கிறபோது, நம்முடைய வருத்தம் மிகவும் அதிகமாகிறது.

ஆகவே, அப்படிப்பட்ட தலைவர் மறைந்து விட்டார் என்று சொன்னால், அவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் அவர்களுடைய பண்பாட்டைப் பின்பற்றி, உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி, அறிவைப் பயன்படுத்தி காரியங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த இரங்கல் தீர்மானத்தோடு காங்கிரஸ் கட்சியின் அனுதாபத்தையும் இணைத்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கு. அ. பொம்மன்: பேரவைத் தலைவரவர்களே, பேரவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்துள்ள டி. டி. கே. மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தின் மீது சுதந்திரா கட்சியின் சார்பில் இரண்டொரு வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

திரு. டி.டி.கே. அவர்கள் ஒரு பொருளாதார மேதை, அரசியல் நாகரீகம் தெரிந்தவர் என்று இங்கேயுள்ள கட்சித் தலைவர்கள்

சொன்னார்கள். அவர்களுடைய கருத்தோடு இணைந்து, எங்கள் கட்சியின் சார்பாக டி. டி. கே. அவர்களின் குடும்பத்தாருக்கு இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய பாரத தேசத்தில் மிகவும் அறிவு நுட்பமும், பொருளாதாரத் துறையிலே மேன்மை வாய்ந்தவர் என்று உலகப் பொருளாதார மேதைகளால் பாராட்டுப் பெற்றவருமான திரு. டி.டி.கே. அவர்கள் மறைந்தது, இந்த நாட்டின் பொருளாதாரத் துறைக்கு மட்டுமல்ல, இந்த நாட்டின் அரசியல் பண்பாட்டிற்கே ஒரு பெரிய இழப்பாகும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. அவர்கள் அண்மைக் காலத்தில் மரணப்படுக்கையில் இருந்தபோது கூட, இந்த நாட்டில் அரசியல் சூழ்நிலையில் ஒரு நல்ல பண்பாடும், சுமுகமும் நிலவ வேண்டும் என்பதற்காக எத்தனையோ முயற்சிகளை எடுத்து இருக்கிறார்கள். அதை நம்முடைய நாடு மறந்து விடாது.

அவர்கள் கொடுத்த பொருளாதாரத் திட்டங்களால் நாட்டின் எல்லாப் பகுதிகளும் வளம் பெற்று இருக்கின்றன. அவர்கள் எவ்வளவு பெரிய அரசியல் பண்பாட்டோடு நடந்து கொண்டார்கள் என்பதற்கு, அவர்களுக்கு எந்தவித சம்பந்தமும் இல்லாத முந்திரா வழக்கை பாராளுமன்றத்தில் கிளப்பியபோது, அதற்குத் தானே பொறுப்பேற்று அவர் பதவியிலிருந்து விலகியது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அப்படிப்பட்ட அரசியல் பண்பாடு இந்த நாட்டிலே வளர்வதற்கு அவர்கள் முன்மாதிரியாகத் திகழ்கிறார்கள். அப்படிப்பட்ட தலைவர் மறைந்ததற்கு நான் சார்ந்திருக்கும் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் அன்னாரின் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக்கொண்டு விடை பெறுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : பேரவைத் தலைவரவர்களே, முன்னவர் அவர்களால் இங்கே முன்மொழியப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

1974 மார்ச் 8] [திரு. கே. டி. கே. தங்கமணி]

காலஞ்சென்ற டி.டி.கே. அவர்கள் அரசியல் சட்டத்தை உருவாக்குவதற்காக இருந்த அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினராக இருந்து, அந்த அரசியல் சட்டம் உருவாவதற்குப் பெரும் அளவிற்கு உதவி செய்து இருக்கிருர்கள். அது மாத்திரமல்லாமல், அவர் நிதி அமைச்சராக இருந்த நேரத்தில் முதன் முதலாக 'வெல்த் டாக்ஸ்' கொண்டு வந்தார். பொதுவாக, தமிழ் நாட்டிலிருந்து தான் சிறந்த அறிவாளிகள் வருவார்கள் என்று டெல்லியில் சொல்வது உண்டு. உதாரணமாக, முதல் நிதியமைச்சராக இருந்தவர் திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார். அதற்குப் பின்னர் திரு. டி.டி.கே. நிதியமைச்சராக இருந்தார்கள். அந்தச் சமயத்தில் முந்திரா ஊழல் சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் பெரோஸ் காந்தி எழுப்பிய உடனே, அந்தக் கருத்திற்கேற்ப அவர் ராஜிஞமாச் செய்தார். அப்படி அவர் உண்மையிலேயே வரலாற்றில் இடம் பெற்ற ஒரு அம்சமாகத்தான் நான் கருதுகிறேன்.

அடுத்து, பாங்குகளைத் தேசிய மயமாக்க வேண்டுமென்று வந்த பொழுது அதை ஆட்சேபிக்கவில்லை அவர். அது மாத்திரமல்லாமல் தேசியமயமாக்கப்பட்ட பாங்குகளிலிருந்து எந்த முறைகளி லெல்லாம் கடன் கொடுக்க வேண்டும் என்பதைப்பற்றி எல்லாம் சிறந்த ஆலோசனைகளை அவர்கள் பிரதமருக்குக் கொடுத்திருக் கிருர்கள் என்பதை நாடு அறியும்.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலே பொதுத் துறையிலே பெரும் பெரும் தொழில்கள் வளர வேண்டும் என்பதற்கு அவர் பெரு முயற்சி எடுத்தார்கள் என்பது அமைச்சர் அவையிலே இருந்தவர்களுக்கெல்லாம் தெரியும் என்று நினைக்கிறேன். நெல்வேலித் திட்டம் தமிழ் நாட்டிற்கு வருவதற்குப் பெரு முயற்சி எடுத்தவர் திரு. டி.டி.கே. அவர்கள்தான்.

ஆகவே, அப்பேர்ப்பட்ட, தமிழ் நாட்டிலிருந்து வந்த ஒரு சிறந்த அறிவாளி அவர், அந்தக் காலத்திலே—நான் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே சொல்கிறேன்—சோவியட் யூனியனை ஹிட்லர் படை தாக்கியபோது சோவியட் நண்பர்கள் சங்கம் என்று ஒன்று அமைக்கப்பட்டது. அப்பொழுது திரு. வி.க. அவர்களும் டி.டி.கே. அவர்களும், சோவியத் நாட்டின்மேல் தாக்கப்பட்டது

எந்த அளவுக்கு மோசமான செய்கையாகும் என்று சோவியத் யூனியனுக்கு ஆதரவாக நின்று கொண்டு பிரச்சாரம் செய்தார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

மறைந்த டி.டி.கே. அவர்களுக்கு இரங்கல் தீர்மானம் கொண்டு வந்ததை ஆதரித்து நான் இத்துடன் அமர்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் பொதுத் துறையிலும், வல்லுனராக தேசம் பூராவும் பெயர் பெற்ற திரு. டி.டி.கே. அவர்கள் நேற்றைய தினம் காலமானது தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் அறிவுத் துறையிலே மிகப் பெரிய நஷ்டம் என்பதை நிச்சயம் தமிழகம் நன்ருக உணர்கிறது என்பதை நாம் பார்க்கிறேம்.

திரு. டி. டி. கே. அவர்கள் பல்வேறு பதவிகளில், பல்வேறு துறைகளில் இந்த நாட்டைச் சுதந்திரத்திற்குப் பிறகு வளப் படுத்துவதிலே மிகப் பெரிய அளவுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்கள் என்பதை சரித்திரம் நிச்சயம் கூறும் என்பது என்னுடைய துணிவு.

எனக்கு முன்பு பேசிய நண்பர் தங்கமணி அவர்கள் கூறியதைப் போல சோவியத் யூனியன் தாக்கப்பட்ட காலத்தில் சோவியத் யூனியனுக்கு ஆதரவாக சோவியத் நண்பர்கள் சங்கம் என்ற ஒரு சங்கத்தை நிறுவிய காலத்தில் தற்செயலாக அவர் அதற்குப் பொருளாளராகவும், நான் அதற்குக் காரியதரிசியாகவும், இப்பொழுது பாராளுமன்ற உறுப்பினராக உள்ள திருமதி பார்வதி கிருஷ்ணன் தலைவராகவும் இருந்து ஐந்து, ஆறு மாத காலத்திற்கு நெருங்கிய வகையிலே நான் அவரோடு பணி புரிந்திருக்கிறேன். அப்பொழுது பல இடங்களுக்கு நானும் அவர்களும் ஒன்ருகச் சென்று பல கூட்டங்களில் பேசியிருக் கிறேம். அந்த வகையிலே எனக்கும் அவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு சில மாதங்களுக்கு இருந்தது. அதற்குப் பிறகு இல்லை.

எப்பொழுது பார்த்தாலும் படித்துக்கொண்டே இருப்பார். அறிவுத் துறையிலே தன்னை எந்த அளவுக்கு வளப்படுத்திக் கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு வளப்படுத்திக் கொண் டிருக்கும் வகையிலே அவர் எப்பொழுதும் படித்துக் கொண்டே இருப்பதை நான் அவரோடு சேர்ந்து போகும்பொழுதெல்லாம் பார்த்திருக்கிறேன்.

1974 மார்ச் 8] [திரு. மணலி சி. கந்தசாமி]

அப்படிப்பட்ட ஒரு பெரியார் காலமானது தமிழ் நாட்டிற்கு வருங்காலத்தில் ஒரு பெரிய நஷ்டம் என்பதைச் சொல்லிக் கொண்டு என்னுடைய சார்பிலும், என்னுடைய கட்சியின் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தலைவர் அவர்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், மற்றும் கட்சித் தலைவர்களும் தெரிவித்த இரங்கல் கருத்துக்களுடன் என்னுடைய வருத்தத்தையும் இணைத்துக் கொள்கிறேன். இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் பேரவை உறுப்பினர்கள் அனைவரையும் ஒரு நிமிடம் எழுந்து மவுனமாக நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் எழுந்து மவுனமாக நிற்க, தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறைந்த தலைவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவை இப்போது ஒத்திவைக்கப்படுகிறது. பேரவை மீண்டும் காலை 10 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை காலை 9.24 மணி அளவில் ஒத்திவைக்கப் பட்டது.

பேரவை காலை 10-00 மணி அளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் மீண்டும் கூடியது.

2. அரசினர் தீர்மானம் வினா நேரத்தை நிறுத்திவைத்தல் குறித்து.

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN : Sir, I move—

'That under Rule 22 of the Tamil Nadu Assembly Rules the Question hour be suspended to-day'.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய வினாக்கள் பட்டியல் நாளைக் காலை எடுத்துக் கொள்ளப் படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS